Journal of Valartamil, eISSN 2821-3157,
Volume 2, No.1, 2021, (1-13)

# கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் உள்வாரி மதிப்பீட்டுச் செயன்முறையை வினைத்திறனுடையதாக மாற்றுதல்

## Making the Evaluation Process Effective in the Learning-Teaching Process

**S. Arulnesan**

**Department of Education and Childcare,**
**Faculty of Arts and Culture,**
**Eastern University, Sri Lanka**

**arulnesan1994@gmail.com**

**Received:** 26 March 2021; **Accepted:** 26 April 2021; **Published:** 04 May 2021

**To cite this article (APA):** Arulnesan, S. (2021). கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் உள்வாரி மதிப்பீட்டுச் செயன்முறையை வினைத்திறனுடையதாக மாற்றுதல். *Journal of Valartamil*, *2*(1), 1-13. https://doi.org/10.37134/jvt.vol2.1.1.2021

**To link to this article:** https://doi.org/10.37134/jvt.vol2.1.1.2021

**ஆய்வுச் சாரம்**: ஆய்வுக்குட்படுத்திய பாடசாலையில் உள்ள "தெரிவுசெய்யப்பட்ட 1C பாடசாலையில் இடைநிலை வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்களது வகுப்பறை கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பான உள்வாரி மதிப்பீடு வினைத்திறன் உடையதாக மாற்றுதல் என்ற தலைப்பின் கீழ், 'பலாங்கொடை இம்புல்பே' என்ற கோட்டத்திற்குட்பட்ட 1C பாடசாலையை மையப்படுத்தி ஆய்வுசெய்யப்பட்டது. இதனை நிவர்த்தி செய்யும் வகையில் இவ்வாய்வு அமைகின்றது. பாடசாலை மட்டத்தில் முறையாகத் தொடர்ச்சியான உள்வாரியான மதிப்பீட்டை மேற்கொள்வதானது நேர மதிப்பீடு, நிதி முகாமைத்துவம், மாணவர்களின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் வகுப்பறைமட்ட மதிப்பீட்டை மேற்கொள்ள முடிகின்றது. அதிபர், ஆசிரியர்களிடம் வினாக்கொத்து, நேர்காணல் மூலம் தகவல் திரட்டப்பட்டதோடு வலயமட்ட மதிப்பீட்டறிக்கைகள், ஆவணங்கள் மூலம் தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் உள்வாரியான மதிப்பீட்டை ஊக்குவிப்பதோடு அதனால் அயல்பாடசாலைகளுக்கான ஆலோசனைகளை வழங்குவதற்கு மதிப்பீட்டின் முக்கியத்துவம் ஆய்வுப் பாடசாலையில் முன்னெடுக்கப்பட்டது. ஆய்வுக்கருவிகளாக வினாக்கொத்து, நேர்காணல் என்பன

பயன்படுத்தப்பட்டன. இவற்றினூடாகத் தரவுகள் அளவுசார் முறையும், பண்பறிசார் முறையும் இணைந்த வகையில் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்படுவதாக அமைந்தது. பாடசாலையின் அனைத்துத் தரப்பினரும் நேர்த்தியான கருமங்களை மேற்கொள்ளும்போது மாணவர்கள் மத்தியில் கல்வி அடைவினை அதிகரிக்கவும் முறையான மதிப்பீட்டைச் செயற்படுத்தும் போது பாடசாலையின் வகுப்பறை மட்டத்தில் கற்றல் – கற்பித்தலில் வினைத்திறனான அபிவிருத்தியை அடையக்கூடிய வசதிகளை அளிப்பதற்கு இவ்வாய்வு முன்னெடுக்கப்படவுள்ளது.

**கருச்சொற்கள்**: கற்றல், உள்வாரி மதிப்பீடு, கற்பித்தல், வினைத்திறன், பாடசாலை

**Absract:** This study was conducted at Balangoda Imbulpe Division under the theme "Transforming Interaction Assessment into Effectiveness of Classroom Learning-Teaching Activities of Teachers Teaching Intermediate Classes in Selected 1C School in under the Research". This study emphasizes the need to address this. At the same time to address this Conducting systematic in-house assessment at the school level enables timely assessment, financial management and classroom assessment of students' learning-teaching activities. Data were collected from the principal and teachers through questionnaire interviews and data from zonal assessment reports and documents. The importance of assessment was promoted through the research school to promote in-house assessment in the learning-teaching process and hence to provide advice to neighboring schools. Questionnaires and interviews were used as research tools. Through these, the data were analyzed in a combination of quantitative and qualitative methods. The study will be conducted to enhance the educational attainment among the students while providing all aspects of the school and to facilitate the effective development of learning-teaching at the school classroom level while implementing proper assessment.

**Keywords:** Learning, introspection, teaching, reaction, school

## முன்னுரை

தெரிவு செய்யப்பட்ட 1C பாடசாலையில் இடைநிலை வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்களின் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் உள்வாரி மதிப்பீட்டுச் செயன்முறையை வினைத்திறனுடையதாக்குவதன் மூலம் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை மேம்படுத்தல் கற்றல் தலையீடுகளின் செயல்திறனை எவ்வாறு மதிப்பிடுவது என்ற கேள்வி சிக்கலுக்குரியது.

அதாவது, மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதில் ஒரு பாடநெறிக்கான உள்வாரி மதிப்பீடு வெற்றிகரமாக உள்ளதா என்பதை எவ்வாறு தீர்மானிப்பது?

என்ற நிலையில் மதிப்பீட்டு முறைகள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில், மாற்றங்களை ஏற்படுத்துகின்றதா? என்பது குறித்து மதிப்பீட்டுக்கு விடப்படுகிறது. இச்செயற்பாடுகள் பயனுள்ளதா என ஆராய்வதாக இருந்தாலும், அத்தகைய மதிப்பீடுகள் தேர்ந்தெடுக்கப்பட்ட அவதானிப்பு மற்றும் அறிவாற்றல் சார்புகளுக்கு ஆளாகின்றன - ஆசிரியர் அவர்கள் நம்ப விரும்புவதை உறுதிப்படுத்தும் ஆதாரங்களைத் தேடலாம், இதில் தெளிவாக, ஒரு தேவை உள்ளது கற்றல் செயல்திறனை மதிப்பிடுவதற்கான முறையான வழிகளைக் கண்டறிந்து மேலும் மாணவர்கள் கற்றலின் வினைத்திறன் தொடர்பாகப் போதிய விளக்கமின்மை, ஒதுங்கியிருத்தல், கற்றலில் நாட்டமின்மை, தன்னாழ்வு பிறழ்வு நடத்தை போன்றவை ஏற்படுகின்றன. இதனைக் குறைத்துக் கற்றலில் மாணவர்களை ஆர்வத்துடன் செயற்பட வைப்பதற்க்ச் சிறப்பான மதிப்பீடு அவசியமாகையால் இவ்வாய்வு முக்கியம் பெறுகின்றது. அத்துடன் கற்றல் குறைபாடுகளினால் பிள்ளைகள் பாடசாலையில் குறிப்பாக வகுப்பறைச் செயற்பாடுகளில் சிறப்பாகச் செயற்பட முடியாதவர்களாகவும் கற்றலில் பின்தங்கியவர்களாகவும் காணப்படுகின்றார்கள். இவ்வாறான நிலைகளை இல்லாமல் செய்யும் வகையில் இவ்வாய்வினை மேற்கொள்வது அவசியமாகின்றது.

## ஆய்வு முன்னோடிகள்

பாரம்பரிய பாடநெறி மதிப்பீட்டுக் கருவிகளின் ஒரு சிக்கல் என்னவென்றால், அவை "மாணவர்-நுகர்வோர்" மாதிரி. மாணவர்கள் விரும்பிய அல்லது விரும்பாதவற்றில் அவர்கள் கவனம் செலுத்துகிறார்கள் நிச்சயமாக, கற்றல் குறிக்கோள்கள் எவ்வளவு சிறப்பாக அடையப்பட்டன என்பதை விட அதில் அவர்கள் கொண்டுள்ள கற்றல் பேறுகளின் மதிப்பீட்டினை இனங்காண்பது சிக்கலாக இருக்கின்றது. மற்றொரு சிக்கல் என்னவென்றால், மதிப்பீடும், கற்றல் பெறுபேறும் ஒன்றோடு ஒன்று இணைந்துள்ளமை. "ஒரு அளவு அனைவருக்கும் பொருந்துகிறது" கற்றல் சார் மதிப்பீட்டை முன்னெடுக்க தேவையான அணுகுமுறையை எடுக்க. ஒப்பீட்டை இயக்க, ஒரு நிலையான வடிவம் பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது வெவ்வேறு கற்றல் மற்றும் வெவ்வேறு ஆசிரியர்களுக்கு இடையில் உள்ள செயற்பாட்டுத் தன்மைகள் தொடர்பாகவும் விளைவாகவும் கேள்விகள் எழுப்புகின்றமை ஏற்றவை அல்ல எனினும் குறிப்பிட்ட பாடநெறி மதிப்பீடு செய்யப்படுதல் அல்லது பயன்படுத்தப்படும்

**கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் உள்வாரி மதிப்பீட்டுச் செயன்முறையை வினைத்திறனுடையதாக மாற்றுதல்**

கற்பித்தல் முறைகள் மதிப்பீடு செய்யக்கூடியதாக இருப்பது அவசியமானதாகும் *(Cashin,1990).*

மியான்மாரில் மேற்கொண்ட கற்றல் - கற்பித்தல் செயற்பாடு தொடர்பான ஆய்வொன்றின் மூலம் பின்வரும் விடயங்களை இனங்கண்டுள்ளனர். வகுப்பறைக் கற்றல் கற்பித்தற் செயற்பாட்டை மேற்கொள்ளும் ஆசிரியர் பலம், பலவீனங்களை இனங்காண்பது அவசியம் என்பதுடன், பலவீனங்கள் நிவர்த்திசெய்யும் போது கற்றல் - கற்பித்தல் வினைத்திறனுடையதாக அமையும் என்பதனால் வகுப்பறை மதிப்பீடு அவசியமாகும். மனித மற்றும் பௌதீக வளங்களை வினைத்திறனுடையதாகத் பயன்படுத்துவதற்கும் ஆசிரியர்களது தொழிற்சாலை அபிவிருத்தி தேவைகளை இனங்காணப்பதற்கும் வகுப்பறை மதிப்பீடு அவசியமாகும் *(Marie Lall, 2010).*

வகுப்பறை மதிப்பீட்டின் மூலம் ஆசிரியர்களது தொழில் அபிவிருத்திப் பயிற்சிகள் ஊக்குவிப்பட்டதன் அடிப்படையில் மாணவர்களது விஞ்ஞானப்பாட அடைவுமட்டம் அதிகரித்துள்ளதுடன் ஆசிரியர்களது கற்பித்தல் செயற்பாடு முன்னேற்றம் அடைந்துள்ளது. கலைத்திட்ட அமுலாக்கம் வினைத்திறனுடையதாக்கப்பட்டுள்ளது *(Joellen Killion, 2016).*

ஆசிரியர்கள் தம்மிடம் ஒப்படைக்கும் பச்சைக்கிளிகளைப் பயனுள்ள பாத்திரங்களாகப் படைப்பதும் பாழாக்கி விடுவதும் படைப்பாளியின் ஆற்றலைப் பொறுத்தது. பிள்ளைகளிடத்திலே மறைந்து கிடக்கின்ற உள்ளார்ந்த ஆற்றல்களை இனங்கண்டு அவற்றை வெளிக்கொணரவும், விருத்தி செய்யவும் வேண்டிய வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பது ஆசிரியரின் தலையாய கடமையாகும். இந்த வகையில் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளை எதிர்காலத் தலைவர்களாக மாற்றியமைக்கும் பொறுப்பு ஆசிரியருடையதாகும் (ஜெயமலர், 2003).

வகுப்பறை சார்ந்த தேவைகள் பகுப்பாய்வு செய்யப்படுவதற்கான மதிப்பீடு முறைகள் காணப்படுவது அவசியமாகும். அதனால் பாடத்திற்கு ஏற்றவகையில் மதிப்பாய்வு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பாடசாலைகளில்; கற்பித்தல் தர உத்தரவாதத்தின் பங்கை மாணவர்களுக்குச் சுட்டிக்காட்டிப் பாராட்டுவதற்கான ஒரு வழியாக வெளியீடுகள், தர உத்தரவாதம், மென்பொருள் வளர்ச்சியின் அவசியத்தினை உணர்த்தி அவற்றிற்கு ஏற்ற வகையில் செயல்முறை ரீதியாக

உள்வாரி மதிப்பீட்டை முன்னெடுப்பது வினைத்திறனான மதிப்பீட்டை வெளிப்படுத்தும் *(Von Velit, 2000).*

வகுப்பறை கற்றலில் அரிதாகவே சேர்க்கப்பட்டுள்ளது. இந்தப் பாடத்திட்டத்தில், மாணவர்கள் ஒருவருக்கொருவர் கற்றல் பயிற்சியாக மதிப்பீடு செய்ய வேண்டியிருந்தது. பியர் மதிப்பாய்வும் பொருள் பற்றிய ஆழமான புரிதலை அடைவதற்கான வழியை வழங்குகிறது. கற்றல் நோக்கங்களின் வகைபிரித்தல், மதிப்பீட்டு நடவடிக்கைகள் மிக உயர்ந்தவை சிந்தனை நிலை. இதன் விளைவை மதிப்பிடுவதற்குக் கற்றல் செயல்திறன் கணக்கெடுப்புப் பயன்படுத்தப்பட்டது மாணவர் கற்றல் குறித்த பயிற்சி மிகவும் அவசியம் என இவரின் ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது *(Saima, M.P.2016).*

கற்றல் செயல்திறனை அளவிடுவதற்கான மற்றொரு மாற்று மாணவர் உணர்வுகள் வழியாகும். ஒரு பாடசாலைச் சூழல், இது பொதுவாகத் தவணைப் பாடநெறி மதிப்பீட்டு ஆய்வின் முடிவைப் பயன்படுத்திச் செய்யப்படுகிறது. இத்தகைய ஆய்வுகள் உயர் கல்வியில் பரவலாகிவிட்டன. மேலும், அவை பெருகிய முறையில் ஊக்குவிக்கப்படுகின்றன பாடசாலை ஆசிரியர்களின் கற்பித்தல் செயல்திறனை மதிப்பிடுவதற்கான தகவல்களைச் சேகரிப்பதற்கான பிரதான வழி *(Sner, 2000).* கற்பித்தல் செயல்திறனை மதிப்பிடுவதற்கான தகவல்களின் பரவலாகப் பயன்படுத்தப்படும் ஆதாரங்கள் இவை என்று ஆராய்ச்சி காட்டுகிறது *(Shaldin, W.R., Cook, T.D. 1991).*

## ஆய்வுப் பின்னணி

இவ்வாய்வுக்காகப் பாடசாலையின் அதிபர், மதிப்பீட்டுக்குழுவினர் ஆகியோருடன் நேர்காணல் நடத்தப்பட்டது. பிரதிக் கல்விப்பணிப்பாளரிடமிருந்தும் வலய மட்ட வெளிவாரி மதிப்பீட்டு அறிக்கையிலிருந்தும் அதிபர்கள் இவ்விடயம் தொடர்பில் முக்கியத்துவம் வழங்காமை, ஆர்வமின்மை, முறையான திட்டமிடல் இல்லாமை காரணமாக மதிப்பீட்டுச் செயற்பாடு முறையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. எனும் தகவல்கள் பெறப்பட்டன. இத்தகவல்கள் அப்பாடசாலையின் முறையான

**கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் உள்வாரி மதிப்பீட்டுச் செயன்முறையை வினைத்திறனுடையதாக மாற்றுதல்**

திட்டமொன்றைத் தயாரிப்பதற்கும் அதிபர், ஆசிரியரிடத்தில் வகுப்பறை மதிப்பீட்டின் முக்கியத்துவம் தொடர்பான மனப்பாங்கை ஏற்படுத்துவதற்கும் முறையான மேற்கொள்வது தொடர்பான வாண்மை விருத்தி பயிற்சியொன்றை வழங்குவதற்கும் பயனுள்ளதாக அமைந்தது.

வேலைப்பளு, முறையான திட்டமில்லாமை, சில மதிப்பீட்டாளர்கள் தமது மதிப்பீட்டுச் செயற்பாட்டைச் சரிவரச் செய்யாமைப் போன்ற காரணங்களால் மதிப்பீட்டை ஒழுங்காக நடைமுறைப்படுத்த முடியவில்லை என அதிபர் கருத்துத் தெரிவித்தார். முறையான திட்டம் தயாரித்தலிலும் குறிப்பிட்ட மதிப்பீட்டை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் தடைகளை நீக்குவதற்கும் இத்தரவுகள் உதவியாக அமைந்தன.

பாடசாலை மதிப்பீட்டுக் குழுவினரிடமிருந்து பெறப்பட்ட தரவின்படி அவர்கள் திட்டமிட்டவாறு மதிப்பீட்டை மேற்கொள்வதில் வேறு வேலைகள், செயற்பாடுகள் தடையாக அமைவதாகக் கூறினர். நேர அட்டவணையை ஒழுங்கமைத்தலுக்கும் முறையான மதிப்பீட்டை மேற்கொள்வதினால் கிடைக்கக்கூடிய குறுகிய கால, நீண்ட கால விளைவுகளை உணரச்செய்தல், மதிப்பீட்டு நடைமுறை தொடர்பான தெளிவினை ஏற்படுத்தல் மதிப்பீட்டை முறையாக மேற்கொள்வதற்கான பயிற்சி வழங்கல் போன்ற செயற்பாடுகளை இவர்களுக்கு வழங்குவதற்கும் இத்தரவுகள் பயன்பட்டன.

## ஆய்வுச் சிக்கல்

பலாங்கொடை கல்வி வலயத்தில் 25 பாடசாலைகள் அமைந்துள்ளள. 1AB பாடசாலைகள் 1. 1C பாடசாலைகள் 2, வகை – II பாடசாலை 12, வகை – III பாடசாலை -09 பாடசாலைகளாக அமைகின்றன. 1C பாடசாலை ஒன்று இவ்வாய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. “தெரிவுசெய்யப்பட்ட 1C பாடசாலையில் இடைநிலை வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்களது வகுப்பறை கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பான உள்வாரி மதிப்பீடு வினைத்திறனுடையதாக நடைபெறவில்லை” என்பது ஆய்வுச் சிக்கலாக உள்ளது. இந்நிலை காணப்படும் பாடசாலைகளில் கற்றல் கற்பித்தல் செயற்பாடு முறையாக நடைபெறாதுள்ளது. மேலும் மாணவர்களது செயற்பாடு ரீதியாகக் கற்றல் குறைவடைவதனால்

மாணவரது அடைவும் எதிர்பார்த்த நிலையை அடைய முடியாதுள்ளது. பொதுப்பரீட்சை முடிவுகளும் பின் தங்கிக் காணப்படுகின்றன. பாடசாலையில் தமது இலக்கை அடைவதில் அடித்தளமாக அமையும் வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடானது ஒழுங்கு முறையாகவும் வினைத்திறனுடனும் நடைபெறுவதனை உறுதிப்படுத்துவதாயின் பாடசாலை மட்டத்திலான கற்பித்தல் மேற்பார்வை இன்றியமையாததாகும். எனவே, கற்றல் கற்பித்தல் மதிப்பீட்டை வினைத்திறனுடையதாக்க மாற்றுதல் எனும் தலைப்பில் ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

## ஆய்வு நோக்கம்

தெரிவு செய்யப்பட்ட 1C பாடசாலையில் இடைநிலை வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்களின் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் உள்வாரி மதிப்பீட்டுச் செயன்முறையை வினைத்திறனுடைய தாக்குவதன் மூலம் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை மேம்படுத்தல்.

## சிறப்பு நோக்கம்

1. வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயன்முறை தொடர்பான உள்வாரி மதிப்பீட்டை நடைமுறைப்படுத்துவதில் உள்ள பலவீனங்களை ஆய்தறிதல்
2. கற்றல் - கற்பித்தல் செயன்முறை தொடர்பான உள்வாரி மதிப்பீட்டை வினைத்திறனுடன் செயற்படுத்தாமைக்கான காரணங்களை இனங்காணல்
3. வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயன்முறை தொடர்பான உள்வாரி மதிப்பீட்டை வினைத்திறனுடையதாக்கவதற்கான செயற்பாட்டு நுட்பங்களைக் கண்டறிதல்.
4. இடர்பாடுகளை நீக்கியதன் அடிப்படையில் உள்வாரி மதிப்பீடானது எவ்வளவு தூரம் வினைத்திறனுடன் நடைபெறுகின்றது என்பதை உறுதிப்படுத்தல்.

## ஆய்வு முறையியல்


அதிபர், ஆசிரியர்களிடமிருந்து நேர்காணல் மூலமும், வினாக்கொத்து வழங்கியதன் மூலமும் தரவுகள் திரட்டப்பட்டன. வலய மட்ட

**கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் உள்வாரி மதிப்பீட்டுச் செயன்முறையை வினைத்திறனுடையதாக மாற்றுதல்**

மதிப்பீட்டறிக்கைகள், உள்வாரி மதிப்பீட்டறிக்கை போன்ற ஆவணங்களிலிருந்தும் தேவையான தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. முறையான உள்வாரி, மதிப்பீட்டுத் திட்டமில்லாமை, வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்தாமை, மதிப்பீட்டாளர்களுக்கு மதிப்பீடு தொடர்பான விளக்கங்கள் குறைவு, அறிக்கைகள் பேணப்படாமை, அதிபரது கண்காணிப்புக் குறைவு, உள்வாரி மதிப்பீட்டின் முக்கியத்துவம் உணரப்படாமை போன்ற தரவுகள் பெறப்பட்டன. இத்தரவுகள் இப்பாடசாலைக்கான முறையான வகுப்பறை மதிப்பீட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கும், மதிப்பீட்டாளர்களுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்குவதற்கும், வகுப்பறை மதிப்பீட்டை வினைத்திறனுடையதாகவும் ஒழுங்கு முறையாகவும் நடைமுறைப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டன.

## தரவுப் பகுப்பாய்வு

அதிபர், ஆசிரியர்கள், வலயக்கல்வி அதிகாரிகள் ஆகியோரிடமிருந்து நேர்காணல் மூலமும் ஆவணங்கள் மற்றும் வகுப்பறை அவதானிப்பின் ஊடாகவும் மதிப்பீட்டின் பலவீனங்கள் இனங்காணப்பட்டன.





**உரு**- 01

குறிப்பாக இதில் வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயன்முறை தொடர்பான மதிப்பீட்டுத் திட்டம் முறையாகத் தயாரிக்கப்பட்டமை, அதிபர் இவ்விடயத்தில் ஆர்வம் காட்டாமை, ஆசிரியர்கள் மேற்பார்வையில் ஈடுபட முன்வராமை போன்ற பலவீனங்கள் காணப்பட்டன. மதிப்பீட்டுக் குழுவினர் அழைத்துக் கலந்துரையாடி வகுப்பறை மதிப்பீட்டின் முக்கியத்துவத்தை உணரச் செய்தமை, மதிப்பீட்டுப் படிவம் பற்றிய விளக்கம் வழங்கியமை, முறையான மதிப்பீட்டுத் திட்டம் தயாரிக்கப்படாமை.

Journal of Valartamil, eISSN 2821-3157,
Volume 2, No.1, 2021, (1-13)

வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயன்முறை தொடர்பான உள்வாரி மதிப்பீட்டை வினைத்திறனுடன் செயற்படுத்தாமைக்கான காரணங்களை இனங்காணல்.




**உரு** – 02

உள்வாரி மதிப்பீட்டின் முக்கியத்துவம் உணரப்பட்டாமை. நேர அட்டவணையில் மதிப்பீட்டுப் பாடவேளை சரியாகவும், பொருத்தமான முறையிலும் குறிப்பிட்டிராமை, மதிப்பீட்டாளர்களுக்குப் போதிய விளக்கமின்மை போன்ற காரணங்களால் மதிப்பீடு சரியாக நடைபெறாத நிலை காணப்பட்டது. மதிப்பீட்டுக் குழுவினருக்கும் ஏனைய ஆசிரியர்களுக்கும் வகுப்பறை மதிப்பீட்டை மதிப்பீட்டுக் குழுவினருக்கும் ஏனைய ஆசிரியர்களுக்கும் வகுப்பறை மதிப்பீட்டைப் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தல் தொடர்பாக வலயக்கல்வி அதிகாரிகளால் வழங்கப்பட்டதுடன் மதிப்பீட்டின் முக்கியத்துவம் உணர்த்தப்பட்டது. பொருத்தமான நேர அட்டவணை தயாரிக்கப்பட்டு, பொருத்தமான மதிப்பீட்டாளர்களும் தெரிவு செய்யப்பட்டனர். வகுப்பறை மதிப்பீட்டின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்பட்டனர்.

அதிபர், மதிப்பீட்டாளர்கள், வலயக்கல்வி அதிகாரிகள் ஆகியோருடன் கலந்துரையாடியதுடன், மதிப்பீட்டுப் படிவங்களும் ஆராயப்பட்டன.


**கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் உள்வாரி மதிப்பீட்டுச் செயன்முறையை வினைத்திறனுடையதாக மாற்றுதல்**




**உரு**- 03

இதில் மதிப்பீட்டாளர்களுக்குக் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட வகுப்பறை மதிப்பீட்டுப்படிவத்தைக் கொண்டு ஆசிரியரை மதிப்பிடுவது சிரமமாக இருந்தது. சரியாக மதிப்பிடமுடியவில்லை. இதற்காக இப்படிவம் எளிய முறையில் மாற்றியமைக்கப்பட்டு ஒவ்வொரு சுட்டிகளையும் மதிப்பீடு செய்யும் முறை, புள்ளியிடும் முறை பற்றி விளக்கமளிக்கப்பட்டுப் பயிற்சி வழங்கப்பட்டது. இதற்காக இலகுவான முறையில் தயாரிக்கப்பட்ட படிவமும் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டது. இதனால் மதிப்பீட்டாளர்களால் நேர அட்டவணைக்கேற்ப சிரமமின்றி வினைத்திறனுடன் மதிப்பீட்டை மேற்கொள்ள முடிந்தது.

அதிபர், மதிப்பீட்டாளர்கள் ஆகியோருடன் கலந்துரையாடியதுடன், மதிப்பீட்டு அறிக்கைகளும் ஆராயப்பட்டன.




**உரு** - 04

மதிப்பீட்டறிக்கைகள் முறையாகப் பேணப்படாமை, அதிபர் இவற்றைக் கண்காணிப்புச் செய்யாமை, மதிப்பீட்டின் பின்னரான பின்னூட்டல் இடம்பெறாமை போன்ற சிக்கல்கள்கள் காணப்பட்டன. அதிபர், பிரதி அதிபர், பகுதித் தலைவர்கள் ஒன்றாக அழைக்கப்பட்டு இச்சிக்கல்கள் பற்றிக் கலந்துரையாடப்பட்டதுடன் இவ்விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

## கலந்தாய்வு

வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள் தொடர்பான உள்வாரி மதிப்பீடு வினைத்திறனுடன் நடைபெறாமைக்கான காரணங்களாகப் பின்வருவன கண்டறியப்பட்டன. குறிப்பாக, வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டை மதிப்பிடுவதன் முக்கியத்துவத்தை மதிப்பீட்டுக்குழு உணராமை

- முறையான வகுப்பறை மதிப்பீட்டுத் திட்டம் தயாரிக்கப்படாமை.
- அதிபர் இவ்விடயம் தொடர்பாக முக்கியத்துவப்படுத்தாமை, முழுமையான கண்காணிப்பிலும் ஈடுபடாமை.
- நேர அட்டவணைக்கேற்ப மதிப்பீட்டிற்குச் சமூகமளிப்பதில் வேறு வேலைகள் தடையாக அமைவது.
- மதிப்பீட்டுப் படிவத்திலுள்ள சுட்டிகளை விளங்கி வினைத்திறனுடையதாக மதிப்பீட்டை மேற்கொள்வதில் மதிப்பீட்டாளர்களுக்குச் சிரமம் காணப்படாமை.

## தீர்வும் பரிந்துரைகள்;

வகுப்பறை மதிப்பீட்டின் முக்கியத்துவம் இதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் என்பவற்றை அதிபர், மதிப்பீட்டாளர்கள் ஏனைய ஆசிரியர்களுக்கு உணர்த்தும் வகையிலான செயற்பாட்டை வலய மட்டத்தில் முன்னெடுத்தல். வருடாந்த வகுப்பறை மதிப்பீட்டுத் திட்டம் முறையாகத் தயாரிக்கப்பட்டு அனுமதி பெறப்படுவது கட்டாயம் என்பதில் அதிபர்களது கவனத்தை ஈர்த்தல் முக்கியமானதாகும். மாணவர்களின் அடைவில் ஏற்படும் மாற்றங்களை இனங்காண்பதன் மூலம் பாடசாலை மட்ட அபிவிருத்தியை கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் முன்னெடுப்பதற்கு வசதியாக அமைகின்றது.

கல்வி அமைச்சின் வகுப்பறை மதிப்பீட்டுப் படிவத்தில் காணப்படும் சுட்டிகளை எளிதான வகையில் மாற்றியமைத்து மதிப்பீட்டாளர்களுக்குப் பயிற்றுவித்தல் மூலம் இச்சிக்கலைக் குறைத்துக்கொள்ள முடியும். மாணவர்களின் நலன்கருதிய இச்செயற்பாடுகளில் ஆசிரியர்கள் முக்கியக் கவனம் செலுத்துவதற்கு அமைச்சின் செயற்பாடுகளில் கூடிய கவனம் செலுத்துவதற்கும் வகுப்பறை மதிப்பீட்டின் ஊடாக பெறப்படுகின்ற நன்மைகளை

அடைவதற்கான முன்னேற்பாடுகளை இதனூடாகப் பெற்றுக்கொள்ள முடிகின்றது.

ஒவ்வொரு தவணை முடிவிலும் மதிப்பீட்டறிக்கைகளை வலயலத்தின் பொறுப்பான அதிகாரிக்குக் கையளிக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதுனூடாகக் குறிப்பிட்ட தவணைகளில் மாணவர்களின் கற்றல் பேறுகள் பாடசாலை மட்டரீதியாகவும் பாடரீதியாகவும் அபிவிருத்தியடைவதை மதிப்பீடு செய்ய முடியும். பாடசாலையில் இதற்கு முறையான குழுவொன்றினை ஏற்படுத்தி வலயக்கல்வி அதிகாரிகளுடான தொடர்பினைத் தொடர்ச்சியாகப் பின்பற்றுவதற்கு முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும்.

வலயமட்ட, கோட்டமட்ட உத்தியோகத்தர்கள் பாடசாலைத் தரிசிப்பின் போது இவ்விடயம் தொடர்பில் கூடிய கவனம் எடுத்துக் கண்காணிப்புச் செய்வதற்கான வழிவகைகளைச் செய்தல். பாடசாலை நிருவாகம் இதற்கான ஏற்பாடுகளை வகுப்பறை மட்டத்தில் ஏற்படுத்துவதற்கு முறையான பரீட்சை செயற்பாடுகள், கணிப்பீடுகள், மதிப்பீட்டு பரீட்சைகள் என்பவற்றின் வளர்ச்சி மட்டங்களைக் கண்காணிப்பது அவசியமாகும். இதேநேரம் மாணவர்கள் கற்றல் - கற்பித்தல் தொடர்பாகக் கொண்டுள்ள ஈடுபாட்டினை விளங்கிக்கொள்வது அவசியமாகும்.

மதிபீட்டின் மூலம் இனங்காணப்பட்ட பலவீனங்கள் தொடர்பான விடயங்களை அபிவிருத்தி செய்யும் வகையிலமைந்த செயற்பாடுகளை வருடாந்த அமுலாக்கல் திட்டத்தினூடாக முன்னெடுக்க ஆலோசனைகள் வழங்கல் மற்றும் ஒவ்வொரு செயற்பாடுகள் தொடர்பாகவும் பின்னூட்டல் நடைபெறுவதனை வலுப்படுத்தல் வேண்டும். நடைமுறையில் காணப்படுகின்ற முறைகளினூடாக புதிய கலைத்திட்ட முறைகளை உள்வாங்கிச் சிறப்பாகச் செயற்படுவதற்கு ஏற்றதான மதிப்பீட்டுச் செயற்றிட்டங்களைக் குறித்த தரப்பினர்கள் ஊடாக முன்னெடுத்தல் அவசியமாகும். பின்னூட்டல் செயற்பாடுகளை முறையாக மேற்கொள்வதன் மூலம் மதிப்பீட்டுச் செயன்முறையில் காணப்பட்ட குறைநிறைகளை அறிந்து உள்வாரியான மதிப்பீட்டுச் செயன்முறையை வினைத்திறனுடையதாக்க முடிகின்றது.

## முடிவுரை

பாடசாலைமட்ட மதிப்பீட்டுச் செயற்பாடுகள் முறையாக மேற்கொள்ளும் போது மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், வலயக்கல்வி அதிகாரிகளுடான தொடர்புகள் மிகவும் நெருக்கமானதாக மாறுவதற்கும் உள்வாரியான மதிப்பீட்டுச் செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக முன்னெடுக்கும்போது கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் வினைத்திறனுடையதாக மாற்றமடையும். ஆசிரியர்கள் தமது வாண்மைத்துவத் திறன்களை விருத்திச் செய்வதற்குப் பல்வேறு வாய்ப்புக்கள் உண்டு அந்த வகையில் பாடசாலைத் தலைமைத்துவம் திறன்விருத்தி மற்றும் உள்வாரியான செயன்முறைகள் விருத்திக்கான வாய்ப்புக்களும் அவசியமாகின்றன. அதிபரின் தலைமைத்துவத்திற்கான திறன்கள் விருத்திச் செய்யப்படும்போது கல்வி அமைச்சுடனான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும் கல்வி அதிகாரிகளுடன் இணைந்து மதிப்பீட்டு நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கும் வாய்ப்பு ஏற்படுகின்றன. குறிப்பாக வகுப்பறை மட்டத்தில் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினை முறையாக மேற்கொள்ளும் போது அதனை உள்வாரியாக மதிப்பீடு செய்வதன் ஊடான செயன்முறை சிறப்பானதாக அமையும். பாடசாலை சார்ந்த பலவீனங்களைக் குறைத்துக்கொள்வதற்கும் நிருவாக மட்டத்தில் சிறந்த மதிப்பீட்டுக்குழு சார்ந்த மேற்பார்வையை ஏற்படுவத்துவதினூடாகப் பல மாற்றங்களை ஏற்படுத்த முடியும்.

## References

Andrade, H. L., & Cizek, (2010). Handbook of formative assessment. New York: Routledge.

Arreola, R. A. (2006). Developing a comprehensive faculty evaluation system (2nd edition). Bolton, MA: Anker Publishing.

Arulmoly,C. (2010) .Child Development and Learning, Raja Book Center, Batticaloa.

Baldwin, T., & Blattner, N. (2003). Guarding against potential bias instudent evaluations. College Teaching, 51, 27–32.

Cashin,E. (1990), Evaluating College And University Teaching: Reflections Of A Practitioner, Kansas State University.

Grace, C. (2008). Educational Research Methods, Evakirin Press, Batticaloa.

Jayamalar T, (2003), Freedom Theory for Creativity in Teaching Professionalism, Education press, Jaffna.

Joellen Killon, (2016), Pairing new science curriculum with professional learning increases student achievement, learning forward organization.

Karunanidhi, M. (2005). Instructions for learning and teaching development, Savemadu Published.

Maria Lall, (2010), Child centered learning and teaching apporoaches in Myanmar, London.

Ministry of Education (2014), What is the standard of our school? Evaluation Procedures for Quality Assurance of School Education, Sri Lanka

Saima, M. P, (2016), Bloom's Taxonomy: Improving Assessment and Teaching-Learning Process Muhammad Tufail Chandio1 University of Sindh.

Shaldin, W.R., Cook, T.D. (1991), *Foundations of programme evaluation. Theories and practice.* London, Sage Publications.

Sinnathambi.M. (2008). Ways to Improve Learning and Teaching, Semadu Library, Colombo.

Van velit, W. 2000. “Quality of Teaching in Four European Countries: A Review of the Literature and Application of an Assessment Instrument, Educational Research.